**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**C.C. No. 6/2025**

**Deposition of P.W. 3**

| | | |
|---|---|---|
| **Name** | : | **Thiru. Manikandan** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |
| **Dated** | : | **18.08.2025** |

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது அழகியபாண்டியபுரம் வனச்சரகத்தில், தனிப்பிரிவு வனவராக பணியாற்றிவருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது நான் களியல் வனச்சரகத்தில் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 30.03.2019 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் வனவர் திரு. ஜெயக்குமார் தலைமையில் வனக்காப்பாளர் திரு.

ரகுவுடன் இணைந்து நானும், ரோந்து மேற்கொள்ளும்போது கடையாலுமூட்டில் இருந்து மாஞ்சக்கோணம் செல்லும் சாலையில் கோதையாறு ஆற்றுப்பாலத்தின் அருகில் வடக்கு பக்கம் உள்ள மாதா குருசடி அருகில் ஒரு டெம்போ வருதைக்கண்டு டார்ச் லைட்டினால் அடித்து நிறுத்த முயற்சி செய்தபோது, அந்த வண்டியை நிறுத்திவிட்டு, ஓட்டுநரும் உடன் இருந்த ஒரு நபரும் தப்பி ஓடி தலைமறைவாயினர். வண்டியினை ஆய்வு செய்தபோது பச்சை தேக்குத்துண்டுகள் மஞ்சள் கயிறினால் கட்டப்பட்டிருந்தது. வண்டியின் சாவியும் அதனுள்ளே இருந்தது. அந்த வண்டியை நானே ஓட்டிச்சென்று குலசேகரம் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தேன். இரவு நேரமாதலால் அங்கே பாதுகாக்கப்பட்டு, 31.03.2019 தேதியன்று அந்த தடிகளை இறக்கி சிவப்பு மையினால் 75 துண்டுகள் எண்ணம் எடுக்கப்பட்டது. வண்டியின் Chase no. வைத்து ஓட்டி வந்த ஓட்டுர் திரு. ஜெகன் என்பதும் கூட இருந்த நபர் தாஸ் என்பதும் தெரியவந்தது. வனவர் திரு. ஜெயக்குமார் அவர்களால் எச்.நமூனா பூர்த்தி செய்து, நீதிமன்றத்தில் ஒ ப்படைக்கப்பட்டது. 07.06.2019 தேதியன்று நீதிமன்ற உத்தரவின்பேரில் எதிரிகள் வனச்சரகத்தில் ஆஜராகி விசாரணை செய்தபோது சம்பவ இடம் பட்டா நிலத்தில் தேக்கு வெட்டியதாக காண்பித்து தந்தார். அங்கு வெட்டப்பட்டிருந்த குத்திமோட்டின் அளவும் தடியின் அளவும் வேறுபாடாக இருந்தது. சம்பவ இடத்திலேயே ஸ்தல மகசர் தயார் செய்தும், குற்ற ஒப்புதல்

வாக்குமூலம் பெறப்பட்டது. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஸ்தல மகசரில் நான் கையொப்பம் செய்தேன். குற்றத்தில் சம்பந்தப்பட்ட தடிகள் உதவி வனப்பாதுகாவலர் முன்பு ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் ஸ்தல மகசர் மற்றும் 1 , 2 எதிரிகள் அளித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அவை ஏற்கெனவே அ.சா.ஆ. 3 முதல் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.